புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# இராபர்ட் கால்டுவெல்லின் பரதகண்ட புராதனம் - ஒரு மதிப்பீடு

*ஆய்வாளர்*

***ஜா. பிராங்கிளின் தேவராஜ்,***

*பதிவு எண் : 011841/ Ph.D.K8/Tamil/Part Time/ July 2019*

*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி,* ***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***

*திருச்சி, தமிழ்நாடு.*

*நெறியாளர்*

***முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி,***

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.*

*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.*

***முன்னுரை***

*இந்திய எழுத்தாளர்கள், இந்திய இலக்கியங்கள் பற்றிய விவரங்களை, நூல்வடிவில் எழுதி இருக்கின்றவற்றை பனுவல் வழி அறிந்து கொள்ளமுடிகிறது. இதைக் காட்டிலும் தமிழ் தெரியாத மேல் நாட்டினர், தமிழ் மொழியைக் கசடறக்கற்று நம் நாட்டு இதிகாச, புராணங்களுக்குச் சென்று, வேதங்களை ஆய்ந்து, அவற்றின் உட்கிடக்கைகளை நூல்வடிவில் தந்து இருப்பது சிறப்புக்குரியது. மிகவும் தொன்மையான, இந்தியப் பாரம்பரியத்தை*

*அடக்கியுள்ள இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம், வேதங்கள், புராணங்கள் ஆகியவற்றைத் 'திராவிடத்தமிழன்' என்று அழைக்கப்படுகின்ற இராபர்ட் கால்டுவெல் ஆராய்ந்து தமது விமர்சனங்களை 'பரதகண்ட புராதனம்' என்ற ஆய்வு நூல் வழி விளக்கியுள்ளார். இக்கருத்துக்களே இவ்வாய்வுக் கட்டுரையின் கருதுகோளாக அமைகிறது. இப்பின்னணியில் இந்திய இலக்கியங்கள் பற்றிய அவரது கருத்தோட்டங்களையும், அதில் சுட்டப்பட்ட நான்கு உட்கூறுகளையும் உள்ளடக்கி இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.*

*இவ்வாய்வு விளக்கமுறை, தொகுப்பு முறை, பகுப்பு முறை என்ற நிலைகளில் அமைந்துள்ளது.*

***வேதங்கள்***

*சதுர்வேதம் எனப்படும் நான்கு பிரபந்தங்கள் உண்டு. அவை 1) ரிக் வேதம், 2) யசுர் வேதம், 3) சாமவேதம், 4) அதர்வணம் என்பவைகளே. வேதம் என்கிற மொழிக்கு அறிவு என்று பொருள். ஒவ்வொரு வேதமும் மந்திரம் என்றும், பிராமணம் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தேவர்களை வணங்குகிற பாட்டுகளுக்கு 'மந்திரம்' என்றும் அந்தப் பாட்டுகளைத் திரட்டின சங்கிரகத்துக்குச் சங்கிதை என்றும் பெயர். வேதப்பாட்டுகளின் கருத்து விளக்கங்கள். வேத மந்திரங்களில் உள்ள துதிகள் இறைவனைப் பாடவில்லை; இயற்கையையே பாடுகின்றன. வேதங்களின் வழிபாடு என்பது வளர்ச்சியடையாத மனிதர்கள் இயற்கையைக் கண்டு அஞ்சி வணங்கியதே என்றும், வேதகாலத்தின் இறுதியில் இயற்கையைத் தேவர்களாக்கி அவர்களுக்கு நெருப்பின் வழியாகக் கையுறை கொடுத்ததே தீ வேள்வி என்றும் அவரது கருத்தாடல் சொல்லுகிறது.*

> ***''வேதம் ஆதியும் அந்தமுமில்லாமல் அநாதியாயிக்கிறதென்று இந்துக்கள் சொல்லி வந்தார்கள். முற்காலத்திலுள்ள புத்த மத வித்துவான்களில் சிலர் இதை ஆட்சேபித்து மனிதருடைய பேர்கள் வேதத்திலிருக்கிறதினால் மனிதர் உண்டானதற்குப் பின்பு வேத முண்டானதேயல்லால் அது அநாதியல்லவென்று தர்க்கித்தார்கள்''*** *என்று கால்டுவெல் உரைக்கிறார்.*
>
> *(பரதகண்ட புராதனம் ப. 3)*

***வேதங்கள் - காலம்***

*ரிக் வேதமே அதிக தொன்மை வாய்ந்தது அதிலுள்ள பாட்டுகள் இன்ன வருஷத்தில் கட்டப்பட்டவைகளென்று திட்டமாய் அறிய சான்று இல்லாவிட்டாலும் ஐரோப்பிய பண்டிதர்கள், ஞானியர்கள் பல காலக்குறிப்புகளைக் கொண்டு, கிறித்து பிறப்பிற்கு முன் ஆயிரத்து இருநூறு வருஷத்துக்கும், எண்ணூறு வருஷத்துக்கும் இடையில் அவைகள் எழுதப்பட்டிருக்கலாம் என்று கணித்திருக்கிறார்கள். உலகத்தில் உண்டாயிருக்கிற நூல்களில் கிறித்து வேதத்தில் அடங்கிய பழைய ஏற்பாடு மாத்திரமே ரிக் வேதத்தைப் பார்க்கிலும், 1400 வருடம் தொன்மைவாய்ந்தது, என்பது அவரது ஆய்வின் கருத்தாகும்.*

> ***''வேதப் பாட்டுகளைத் திரட்டினவர்களில் முதன்மையானவனுக்கு வேதவியாஸர் என்று பேர். வேதவியாஸர் என்றால் வேதங்களைத் திரட்டினவன் என்றர்த்தம். கிறித்து பிறக்கிறதற்கு ஏறக்குறைய நானூறு வருடத்துக்கு முன்னே வேதத்திலுள்ள ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு பாட்டிலுள்ள ஒவ்வொரு பதமும் அநுக்கிரமணிகள் என்னப்பட்ட வேத அட்டவணைகளில் குறிக்கப்பட்டது மன்றி ஒவ்வொரு சொல்லின்***

***விளக்கங்களையும் விளக்கும் நிகண்டுகளும் நிருக்தங்களும் அப்போது செய்யப்படுங்காலத்தில் சில பாட்டுகள் புதிதாய் வேதத்தோடு சேர்க்கப்பட்டிருக்கலாம். இரண்டொரு பாட்டுகளில் பிற்காலத்து சமஸ்கிருத பதங்கள் காணப்படுகிறபடியினாலே அப்படி நடந்திருக்குமென்று தோன்றுகிறது''*** *என்பதாக இந்நூல் ஆசிரியர் கருதுகிறார்.*

*(பரதகண்ட புராதனம் ப. 3)*

**வேதங்களும் - ஆசிரியர்களும்**

*பொதுவாக வேதமந்திரங்களை முனிவர்கள் பாடி இருக்கிறார்கள். அவற்றை அவர்களுடைய வழித்தோன்றல்கள் பாதுகாத்தனர் என்பதாகக் கால்டுவெல் கருதுகிறார். பிற்காலத்தில் வேதங்களைப் படித்து அதன் கருத்துகளைப் பேரறிஞர்கள் விளக்கினார்கள்.*

*'ரிக்' வேதம் அதிக பு+ர்வீகமானது, தொடக்கமும் முடிவும் கொண்டது. மந்திரங்கள் எழுதியவர் விசுவாமித்தரர், வசிட்டர், அகத்தியர் ஆகியயோர். ரிஷிகள் தாம் வேதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர் என்பது அவரது கருத்தாக அமைகிறது.*

**வேதங்கள் - பொருண்மை**

*சதுர் வேதங்கள் எனப்படும் நான்கு வேதங்கள் மந்திரம், பிராமணம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. பிராமணங்களைப் பார்க்கிலும் வேதத்தில் உள்ள பாட்டுகள் பழமையானது. வேதங்கள் மூன்று மாத்திரம் உண்டென்று தொன்மையான சாஸ்திரங்கள் பெரும்பாலும் சொல்லுகின்றன. யாகஞ் செய்யும் பொழுது நிகழ்ந்த தவறுகளைச் செய்யும் மந்திரங்களும், நல்ல பலன் கிடைக்கும்படி செய்யும் மந்திரங்களும் ஆகிய இவைகளே அதர்வணத்தில் அடங்கியிருக்கிறபடியால், ஆதியில் அதற்கு வேதமென்று பெயரில்லை. ரிக் வேதம் அதிக தொன்மை வாய்ந்தது. சாமம் என்றால் ஆறுதல் செய்தல் என்பது பொருள் என்பது அவரது ஆய்வு தரும் செய்தி.*

*நான்கு வேதங்களும் இறைவனது பேரில் நான்கு சக்கரங்கள் என பக்தர்கள் நம்புகிறன்றனர்.* ***''வேதங்கள் எடுத்துக்கொண்டு வேதங்கள் பார்ப்பனர்கள் சொல்வது போன்று 'தான் தோன்றி' என்றோ, இறைவனால் அருளப்பட்டது என்றோ கொள்வதற்கு வேதங்களில் உள்ள செய்திகளே முரணாக உள்ளன''*** *என்கிறார் கால்டுவெல்.*

*(பரதகண்ட புராதனம் ப. IV)*

*சுருங்ககூறின் ரிக்வேதத்தில் உள்ள சாரம்சம் இதுகாறும் சுட்டப்பட்டவைகளே. இதைத் தேடி துருவிப் பார்க்கின்ற போது, கட்டுக்கதைகளும், மீவியல்பு கூறுகளும், உயர்வான கற்பனைகளும், நாயக வழிபடுகளுமே பெரிதும் காணப்படுகிறது. வேதங்களைத் தங்களுடையது என சொந்தம் பாரட்டுகின்ற பிராமணர்கள் உயர்சாதியினர் அல்ல. அது ஒரு தொழில் பெயராக இருந்தது. பிரம்மன், சிவன், விஷ்ணு, உமையாள், பார்வதி என்று சொல்லப்படுகிற. இருபால் தெய்வங்களை வணங்கியதாகத் தெரியவில்லை என்பதையும் கால்டுவெல் குறிப்பிடுகிறார். சிவனது பெயர் ரிக்வேதத்தில் இல்லை. அவன் ஒரு சேவகனாக இடம் பெறுவதாகக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். பல நூல்களை ஆய்ந்து மேல் நாட்டு அறிஞர் கருத்துகளையும் அதனோடு ஒப்பீட்டு வேதங்கள் பற்றிய உண்மைகளையும் இவ்விதம் அறிஞர் கால்டுவெல் பதிவு செய்கிறார். ரிக் வேதத்திலுள்ள பாட்டுகளைச் சோதித்துப் பார்க்கும் போது மனிதருடைய பெயர்களைக் குறிக்கும் பதங்கள் அந்தப் பாட்டுகளில் காணப்படுகிறதுமல்லாமல் பற்பல தேசங்களையும், பட்டணங்களையும், நதிகளையும், மிருகங்களையும், பூண்டுகளையும்,*

பற்பல இராசாக்களையும், அந்த இராசாக்களுக்குள் நடந்துவந்த கொள்வன கொடுப்பனவற்றையும், அவர்களுடைய யுத்தங்களையும், தானதர்மங்களையும், அக்காலத்து மக்களுள் நடந்து வந்த பற்பல நிகழ்வுகளையும் குறிக்கும் பதங்களும் அந்தப் பாட்டுகளில் காணப்படுகிறது. ரிக்வேதத்திலுள்ள இரண்டொரு பாடலில் உலகத்தை உண்டாக்கின தேவன் யாரென்றும், தேவர்களுக்குத் தேவனானவர் எவரென்றும் ஆவலோடே கேட்கிற கேள்விகள் உள்ளன. இவைகளைப் பார்க்கும் போது இந்துக்கள் ஒரே உண்மையான தேவனை மறந்தவர்களாயிருந்தும் அக்காலத்திலுள்ளவர்களில் சிலர் 'தடவியாயினும் அவரைக் கண்டு பிடிக்கத்தக்கதாகக் கர்த்தரைத் தேடினார்கள்' என்று நினைக்கிறதற்கு வழிவுண்டு. ரிக்வேதத்திலுள்ள பாடல்கள் இன்னவிதமென்றும், அந்தப் பாட்டுக்களில் இந்திரன் அக்கினிமுதலான தேவர்களைப் போற்றிய வகை இன்னதென்றும் விளங்கும்படி சில பாடல்கள் விளக்கமாகக் காட்டப்படுகிறது. ரிக் வேதம் சொல்லிய தேவர்கள் பஞ்சபு+தங்களேயல்லாமல் வேறல்லவென்று இந்த விளக்கங்களால் நன்றாய் விளங்கும்.

**இதிகாசங்கள்**

இதிகாச புராணங்கள், வேதங்கள் ஆகியன வடமொழியிலேய எழுதப்பட்டதாகக் கருத்துக்கள் உள்ளன. ஆனால், இவற்றைக் காலவரிசைப்படி ஆராய்ந்த பெருமை கால்டுவெல் அவர்களுக்கு உண்டு. பரதகண்ட புராதனம் என்ற நூலில் வேதங்கள் இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றைப் பற்றிய ஆய்வுரையையும், விமர்சனங்களையும் கால்டுவெல் எழுதியுள்ளார். இந்நூல் பற்றி,

> ***''வேதங்கள், இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவற்றைக் காலவரிசைப்படி ஆய்வு செய்து பல வரலாற்றறுத் தகவல்களைத் தக்க சான்றுகளுடன் வழங்கியுள்ளார். இந்நூல் முற்கால பாரதம், இந்து மதத்தின் பண்டைய நிலை, வேதங்கள் பற்றிய முழுமையான விளக்கம் முதலியனவற்றை அறிந்து கொள்ளப் பயன்படும். பரதகண்ட புராதனம் என்னும் நூல் இந்திய சமயங்களுள் இந்து சமயத்தைப் புரிந்து கொள்ளும் நோக்கில் மேற்கொண்ட தேடலின் விளைவாகும்''*** என்று முனைவர் ஞான சந்திர ஜாண்சன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

*(அருட்பணியாளர் இராபர்ட் கால்டுவெல் பக். 313-314)*

இந்திய நாட்டின் பாரம்பரியம், தொன்மை, பண்பாடு, கலச்சாரம், அரச பழக்கவழக்கங்கள், சடங்குகள் ஆகியவற்றைப் பேசுகின்ற செய்திகள் இதிகாசங்களாகப் பரிணமிக்கின்றன. இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டும் பிற்காலத்தில் காப்பியங்களோடு இணைத்து பேசப்பட்டன. காப்பியத்தின் இலக்கணம் இதிகாசத்தோடு பொருத்திப் பார்க்கின்ற நிலை தமிழ் இலக்கியத்துற்குள் நுழைந்து. பின்னர் காப்பியம் என்று நிலைத்துவிட்டது. காப்பியம் அல்லது காவியம் என்று அழைக்கப்படுகின்ற இலக்கிய வடிவத்திற்கு தொல்காப்பியத்தில் ஒரு நூற்பா காணப்படுகிறது. தொல்காப்பியர்,

***''பாட்டு இடை வைத்த குறிப்பி னானும்***

***பாவின் றெழுந்த கிளவி யானும்***

***பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்***

***பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று***

***உரைநடை வகையே நான்கென மொழிப''***

*(தொல். பொருள். செய்யுளியல். நூ.எண்:1421)*

*என்று செய்யுளியல் இயலில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.*

*இதில் பொருள் மரபு இல்லா, பொய்மொழி, பொருளளோடு புணர்ந்த நகைமொழி என்ற இரண்டும் காப்பியம் என்ற வடிவில் அடக்க முடியும் என இலக்கிய ஆசான்கள் கருதுக்கின்றனர். உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் என்ற கருத்து சிலம்பிற்கு மட்டும் இன்றி ஏனைய காப்பியங்களுக்கும் பொருந்தும். இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். இக்கருத்து பின்னணியில் இதிகாசங்கள் அணுகப்படுகின்றன. பதினெண் புராணங்களே இந்து மதத்திற்கு அடிப்படை ஆதாரமாக அமைந்துள்ளன. ஆனால், இராமாயணமும், மகாபாரதமும் புராணங்கல்ல என்பது இராபர்ட் கால்டுவெல்லின் கருத்து. பல்வேறு பழங்கதைகளைக் கொண்டுள்ள காரணத்தால் மகாபாரதமே இதிகாசம் என அழைக்கப்படுகிறது. ஆனால், இராமாயணம் பாரதத்திற்குரிய பண்பில்லாததாலும் தனிப்பட்ட ஒருவரால் இயற்றப்பட்டுள்ளதாலும் அது காவியமென்றே அழைக்கத்தக்கது என்பது கால்டுவெல்லின் கருத்து. இராமாயணம் பிற்காலச் சேர்க்கைகளையும் கொண்டுள்ளது என உரைக்கும் கால்டுவெல், வால்மீகி ரிக் வேதகாலத்ததைச் சேர்ந்தவர் என்பதால் தவறால் இயற்றப்பட்டிருக்க முடியாது என்கிறார். 'குசலவர்' என்பது அரண்மனைக் கவிராயர்களைக் குறிக்கும் பெயர். அக்கவிராயர்கள் பாடிய இராமன் கதையே செவிவழியாகக் கேட்டு மக்கள், மாற்றியும் கூட்டியும் வழங்கி வந்து, பிற்காலத்தில் எழுதப்பெற்றிருக்க வேண்டும் என்கிறார்.*

### ***இதிகாசங்கள் காலம்***

*இவ்விரு பெரு நூல்களும் தோன்றிய காலத்தை வரையறுக்கும் கால்டுவெல், மகாபாரதத்தைவிட இராமாயணம் மிகப்பழமை வாய்ந்தது எனவும் அது ரிக் வேதத்தைக் காட்டிலும் காலத்தால் பிற்பட்டது என்று துணிந்துள்ளார். புத்த சமயத்தின் தோற்றத்திற்குப் பின்னும் கிறித்துப் பிறப்பிற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்பே இராமாயணம் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்று அவர் உறுதி செய்கிறார். கிறித்தவ சமயம் ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முற்பட்டது. இயேசு பிறப்பிற்கு முன்னரே இராமகதை எழுதப்பட்டுள்ளதாக வேறுபலரும் கூறுகின்றனர்.*

> ***''மகாபாரதத்தைவிட இராமாயணம் தொன்மையானது; ஆயினும் இருக்கு வேதத்தைக் காட்டிலும் காலத்தால் பிற்பட்டது என்று துணிந்துள்ளார். புத்தசமயத்தின் தோற்றத்திற்குப் பின்னும் கிறித்துப் பிறப்பிற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னும் இராமாயணம் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்று உறுதிசெய்கிறார் கால்டுவெல்''*** *என்பதாக ஒரு ஆய்வாளர் கருதுகிறார்.*

*(கால்டுவெல்: பார்வையும் பங்களிப்பும் ப. 477)*

*பல மொழிகளிலும் இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் கம்பநாடன் 'இன்பமான செய்யுளலங்காரம்' கொண்ட நூலாகப் படைத்துள்ளதையும் அது கிறித்துப் பிறந்து 1000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டது என்னும் கல்வெட்டுச் சான்று கொண்டு கால்டுவெல் முடிவு செய்கிறார்.*

### ***இதிகாசகங்கள் - ஆசிரியர்***

#### ***இராமாயணம்***

இராமாயணம், இராமனுடைய வரலாற்றைச் சொல்லுகிற ஒரே கவிஞரால் எழுதப்பட்டுதன்று தோன்றுகிறபடியினாலும் பலவகைச் செய்யுள் சிறப்பு அதில் அணி செய்வதாலும் இராமாயணத்தைக் காவியமென்று சொல்லலாம். இந்துக்கள் இவ்விரண்டு காவியங்களையும் வைதீக நூல்களாகவும், புனித அதிகாரமுள்ள பிரபந்தங்களாகவும் எண்ணுகிறார்கள். பாரதத்தைப் பார்க்கிலும் இராமாயணம் பு+ர்வீகமுள்ளதென்று தோன்றுகிறது.

***''குசலவரை இராமனுடைய மக்களென்று நினைக்கக் கூடாது. குசலவர் என்கிறது ஒரே பதமேயல்லாமல் இரண்டு பதமல்ல. குசலவன் என்றால் சூதரென்று அர்த்தம். சூதரென்றால் அரண்மனைக் கவிராயர்கள். அப்படிப்பட்ட குசலவர்கள் மன்னர்களின் திருமணங்கள், யாகங்கள், திருவிழாக்கள் இவை முதலான வேடிக்கைகள் நடந்துவரும் சமயங்களில் இராமன் கதையை நடத்தி இருக்கலாம்''*** *என்று கால்டுவெல் கருதுகிறார்.*

*(பரதகண்ட புராதனம் ப. 30)*

**ஆசிரியர் - காலம்**

தமிழ் இராமாயணம் செய்யுளலங்காரமுள்ளதென்று பெயர் பெற்றதாயிருக்கிறது அதை எழுதினவன் சோழ நாட்டைச் சேர்ந்த கம்பன். அந்த நாட்டின்பேரால் அவனுக்குக் கம்பன் என்று பேர். கிறித்து பிறந்து 785 ஆம் வருடத்திற்குப் பின்பு கம்பன் அதை அரங்கேற்றினதாக இராமாயணப் பாயிரத்தில் காணலாகும் ஒரு பாட்டில் சொல்லியிருக்கிறது. ஆதலால், தமிழ் இராமாயணம் கிறித்து பிறந்து 1000 வருஷத்திற்குப் பின்பு எழுதப்பட்டிருக்கலாம் என்கிறார் கால்டுவெல். இராமாயணம் ஒரு புனைக்கதையாக ஒரு வீரனுடைய வாழ்க்கை நிகழ்ச்சியாக எழுதப்பட்டு இருக்கிறது. பல இராமாயணங்கள் உள்ளன. எது உண்மையானது என்பது எவராலும் கண்டுப்பிடிக்க முடியவில்லை. பிற்காலத்தில் சமயக் கடவுளாக இராமனை வழிப்பட்டு வருகிறார்கள் என்பது கால்டுவெல்லின் மறைமுகமான கருத்தாகும். இராம தெய்வ அவதாரப் பாட்டுகள் பிற்காலத்துக் கவிஞர்களால் கட்டப்பட்டவைகள். சுருங்கக் கூறின் இராமாயணத்தில் வருகின்ற புரோகிதர், ரிஷிகள், முனிவர்கள், இராஜாக்கள் எனவரும் பாத்திரங்கள் அனைத்தும் மக்களால் சமயநோக்கோடு பார்க்கும் பார்வையாகப் பிற்காலத்தில் அமைந்து விட்டது என்கிறார் கால்டுவெல். உண்மையான இராமாயணம் எது என்று தெரியாத நிலையில் 20-க்கும் மேற்பட்ட இராமாயணங்களும் கிளைக்கதைகளும் உள்ளதாக நம்பப்படுகிறது. ஆனால், கம்பன் தமிழ் மரபிற்கு ஏற்றபடி வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவி எழுதினார் என்ற கருத்து தமிழ் கூறும் நல்லுலகில் ஆய்வாளர்களாலும், தமிழ் ஆசனங்களாலும் உரைக்கப்பட்டுள்ளது. உண்மையில் இராமன் ஒரு தெய்வம் அல்ல; அவனது வீரமே, இராமாயண முழுவதுமே காணப்படுகிறது. இராமாயணத்தை ஆய்வு செய்த கால்டுவெல் அவர்கள்,

***''விவேகமுள்ளவர்கள் இராமாயணத்தைக் கூர்மையாய்ச் சோதித்துப் பார்த்தால் பிற்காலத்தில் கட்டப்பட்ட சங்கதிகளைக் கண்டுபிடிக்கலாம். ஆரம்பத்தில் சொல்லிய கதையைப் பார்த்தால் இராமனுடைய ஒவ்வொரு செய்கையும், பேச்சும் வீரனுக்கேற்றவையாகக் காட்டியிருக்கிறதேயன்றி தெய்வத்துக்கேற்றவைகளாகக் காட்டியிருக்கவில்லை''*** *என கால்டுவெல் மறுக்கிறார்.*

*(பரதகண்ட புராதனம் ப. 41)*

***''இராமாயணத்திலுள்ள அடிப்படை உண்மை வரலாற்றை அதன்மீது கட்டப்பட்டுள்ள வீண்கதைகள் மறைக்கின்றன என்பது அறிஞர் துணிவு. அறிவுக்குப் புறம்பான கதைகளை***

***மிக்க ஆர்வத்துடன் பண்டைய இந்துக்கள் எழுதியுள்ளனர். வருணித்துச் சொல்லும் திறமை மிகுதியாகக் கொண்டிருந்த அரக்கர்களையும், பு+தங்களையும் குறித்த அவர்கள் தம் சித்திரிப்புகளை ஐரோப்பாவிலுள்ள குழந்தைகளால் மட்டுமே நம்பி இரசிக்கமுடியும். வளர்ந்தவர்கள்; அக்கதையைக் கேட்பது புண்ணியச்செயல் என்று எண்ணுகின்றனர்''*** என்ற கருத்தும் இராமாயணத்தைப் பற்றி எழுந்துள்ளது.

*(கால்டுவெல் பார்வையும் பங்களிப்பும் ப. 478)*

***''இந்தியமொழிகளில் காணப்படும் பல்வேறு மதநூல்களின் அடிப்படையும் ஒன்றுதான். இராமாயணம், மஹாபாரதம், பாகவதம் போன்ற நூல்களின் கருப்பொருள்கள் இந்திய இலக்கியம் முழுவதும் விரவிக்காணப்படுகின்றன. ஆனால் கம்பர் தனித்துவமிக்க மாறுதல்கள் செய்ததுபோலப் பிறமொழிகளிலும் செய்துள்ளனர்''*** என்பது பேராசிரியர் பூரணச்சந்திரனின் கருத்தாகும். *(இந்திய மொழிகள் ஓர் அறிமுகம் ப. 20)*

**மகாபாரதம் - காலம் - ஆசிரியர்**

*கிறித்து பிறக்கிறதற்கு ஏறக்குறைய 500 வருஷத்துக்கு முன்னே வேதங்களைத் திரட்டியிருக்குமென்று அறிஞர்கள் நினைக்கிறார்கள். ஆகையால், பாரதம் எழுதப்பட்டது ரிக்வேதத்திற்குப் பின்னர் தான் என்பது கால்டுவெல்லின் கருத்து. கிறித்து பிறப்பதற்கு ஏறக்குறைய 300 வருஷத்துக்கு முன்னே புத்தமதம் விருத்தியடைந்தது. ஆகையால் பாரதம் அந்தக் காலத்திற்குப் பின்பு எழுதப்பட்டிருக்கலாம்.*

**மகாபாரதம் - பொருண்மை**

*கௌரவருக்கும், பாண்டவருக்கும் நடந்த போர் மகாபாரத்தத்தின் மையக் கருத்தாகும். கௌரவர், பாண்டவர் ஆகிய இரு பிரிவினரும் சந்திரகுலத்தைச் சேர்ந்தவர்கள். பு+ர்வீக இந்துக்களுக்குள்ளே வழங்கி வந்த கதைகள், இதிகாசங்கள் அந்தக் காலத்திலுள்ளவர்கள் கைக்கொண்ட ஆசாரங்கள், சாஸ்திரங்கள், சட்டங்கள் அவர்களுக்குள்ளே வழங்கிவந்த சமயத் தொடர்பான செய்திகள், சதுர் வேதத்திலுள்ளவைகளை அல்லாமல் பண்டைய இந்துக்கள் அறிந்த செய்திகள், அந்தந்த மன்னர்களுக்கிடையே நடந்துவந்த போர்கள், நட்புகள், வேடிக்கைகள், சுபாசபங்கள் இவைகளெல்லாவற்றையும் குறித்து பழம் புலவர்கள் எழுதிய செய்யுட்கள் பாரதத்தில் காணவியலும். பாரதக் கதைகளை எல்லாம் பாரதத்தில் சேர்க்கிறதற்குமுன்னே அவைகள் மக்களுக்கிடையே வெகுகாலமாய் வழங்கி வந்திருக்க வேண்டும். பாரதத்திலுள்ள பாட்டுகளில் இன்ன பாட்டு இன்ன காலத்திலுள்ளதென்று தீர்மானிக்க இயலாது. ஏனெனில் வாய்மொழியாகவே அவை வந்து இருப்பதால் காலத்தை அறுதியிட்டுக் கூறமுடியாது.*

**புராணங்கள்**

*புராணங்கள் இந்து சமயத்தை அடியொற்றி அமைந்தவை அவர்களது கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அடிப்படையாக வைத்துக் கிரந்த மொழியில் எழுதப்பட்டது. புராணங்களென்ற பேருடைய பிரபந்தங்கள் பதினெட்டு. இவைகளின்றி உபபுராணங்கள் என்னப்பட்ட பதினெட்டு சிறு புராணங்களில் பல இப்பொழுது இல்லை. அநேக தல புராணங்களும், மான்மியங்களும் உள்ளன. தலங்களை முக்கியப்படுத்தி அந்த தலங்களில் சிறப்பாக வணங்கப்பட்டு வருகிற தேவர்களைப் புகழும்படி எழுதப்பட்ட கதைகள் கிரந்த புராணங்களில் இரண்டொன்று மாத்திரம் நாட்டு மொழியால் திருத்தப்பட்டிருக்கின்றன.*

புராணங்கள் என்ற பேருடைய சிற்றிலக்கியகள் பதினெட்டு, அவைகளையல்லாமல் உபபுராணங்கள் என்னப்பட்ட பதினெட்டு சிறு புராணங்களும், உண்டென்று சொல்லுவார்கள். அந்த சிறு புராணங்களில் அநேகம் இப்பொழுது இல்லை. அநேக புராணங்களும், மான்மியங்களும் அங்கங்கே உள்ளன. அவை எப்படிப்பட்டவைகளென்றால், சில தலங்களை முக்கியப்படுத்தி அந்த தலங்களில் சிறப்பாக வணங்கப்பட்டு வருகிறது. இவை தேவர்களைப் புகழும்படி எழுதப்பட்ட கதைகளாகும். புதினெண் புராணங்கள் எடுத்து எழுதப்பட்டது போல, இவை ஒவ்வொன்றிலும் சொல்லியிருக்கிறது. தல புராணங்களில் அனேகம் அந்தந்தத் தேசங்களில் வழங்கிய மொழிகளில் எழுதப்பட்டிருக்கிறதேயல்லாமல் கிரந்த மொழியில் அவைகளுக்கு மூலமில்லை. அவற்றில் சிலவற்றைப் புராணம் என்று கூறமுடியாது. திருஷ்டாந்திரமாகப் பெரிய புராணமென்கிற பேரிருந்தும் புராணத்திலிருக்க வேண்டிய கூறுகள் ஒன்றும் அதிலே இல்லை.

**புராணங்கள் - ஆசிரியர்**

பாரதமே பதினெண் புராணங்களும் வேதவியாசனால் எழுதப்பட்டனவென்று சொல்லியிருக்கிறது. அவற்றை வாசித்து ஒன்றொடோன்று ஒத்துப் பார்க்குமளவில் செய்யுள் சிறப்பிலும், வாசகநடையிலும், கருத்திலும் அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை, ஒரே இயல்புள்ளவைகளல்ல என இந்து தேசத்து வித்துவான்களில் சிலர் ஆய்ந்து, ஒருவனே அவைகளெல்லாவற்றையும் எழுதினதாக ஒப்புக்கொள்ளக் கூடாதென்று கருத்து தெரிவித்திக்கிறார்கள். வேத செய்திகளைப் பற்றிப் போதித்தலே புராணங்கள்யாவும் எழுதப்பட்ட நோக்கம். அவைகளில் சில இந்த ஒரே நோக்கத்தினாலே மாத்திரம் எழுதப்படடுள்ளது. பல செய்திகளை பற்றி அவை சொல்லியிருந்தாலும் புராணங்களை எழுதினவர்கள் எந்தச் சமயத்தாரயிருந்தார்களோ அந்தச் சமயத்தை உறுதிப்படுத்தும்படிக்கு அதற்குரிய தேவர்களைப் புகழ்வதும் அதற்குரிய உபதேசங்களைக் காட்டுவதே புராணங்களிலுள்ள முக்கிய பொருள். தென் இந்தியாவில் 18 புராணங்கள் வழங்கப்படுகின்றன. 1. மச்ச புராணம், 2. கூர்மபுராணம், 3. வராகபுராணம், 4. வாமன புராணம், 5. பிரமபுராணம், 6. விஷ்ணு புராணம், 7. பாகவத புராணம், 8. சிவபுராணம், 9. இலிங்கபுராணம், 10. பவுஷிய புராணம்(பௌடியம்), 11. நாரதபுராணம், 12. கருடபுராணம், 13. பிரம்மவைவர்த்த புராணம், 14. ஸ்கந்த புராணம், 15. மார்க்கண்டேய புராணம், 16. அக்கினி புராணம், 17. பிரமாண்டபுராணம், 18. பதுமபுராணம் இவைகளே.

**புராணங்கள் - பொருண்மை**

1) மச்ச புராணம் மச்ச ரூபம் கொண்ட விஷ்ணு மனுவுக்கு கூறியதும். 2) கூர்ம புராணம் என்பது அவன் கூர்ம ரூபம் கொண்ட போது இந்திரனுக்குப் போதித்ததையும். 3) வராக புராணத்தில் விஷ்ணு பு+மாதேவிக்கு கற்றுக் கொடுத்ததையும் குறிக்கிறது. 4) வாமன புராணத்தில் சிவலிங்கம் நிறுவப்பட்ட சில இடங்களையும் சிறப்பான சைவத்தலங்களையும் மையப்படுத்தி எழுதப்பட்ட மான்மியக் கதைகள். 5) பிரமபுராணம் - ஆதிபுராணம் என வழங்கப்படுகிறது. 6) விஷ்ணு புராணத்திலும், பஞ்ச லட்சணங்கள் அரைகுறையாய்க் காணப்படுகிறதே அன்றி முழுமையாகவும் இருக்கவில்லை.

7) பாகவத புராணம் - இதுமிகுந்த செய்யுள் சிறப்புள்ள புராணமானதினால் எல்லாப் புராணங்களிலும் இதுவே பேர் பெற்றது. 8) சிவபுராணமும், வாயு புராணமும் ஒன்றே அல்லாமல் இரண்டல்லவென்று கருதப்படுகிறது. 9) இலிங்க புராணத்தில் சிவன் இலிங்கரூபங் கொண்டு விளங்கினதாக சொல்லியிருக்கிறது. 10) பவுஷிய புராணம் நடக்கப் போகிற சங்கதிகளை முன்னே அறிவிக்கிறது போலப் பவுஷிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. 11) நாரத புராணத்தில்

*நூலில் புராணத்துக்கிருக்க வேண்டிய பஞ்ச லட்சணங்கள் ஒன்றுமில்லை. விஷ்ணுவிடத்தில் ஆழமான நம்பிக்கை வைப்பதே பக்தி என்று இதில் போதிக்கப்பட்டுள்ளது. 12) கருட புராணம் என்பது நாரத புராணத்தைக் குறித்துச் சொல்லியதேயாகும்.*

*13) பிரம்மவைவர்த்த புராணத்தில் பாலகிருஷ்ணனையும,; கிருஷ்ணனுடைய நாயகியாகிய ராதாவையும் புகழ்ந்து அவர்களை வணங்கும்படி போதித்திருக்கிறது. 14) ஸ்கந்த புராணம் சைவ புராணங்களில் சிறப்பானது. இந்தப் புராணம் சிவனைப் பரமேசுரனாகக் காட்டிய போதிலும் ஸ்கந்தன், சுப்பிரமணியன், கார்த்திகேயன், முருகன், குமாரன் என்னும் பேர்களையுடையவனாகிய சிவனுடைய இளையகுமாரனை முக்கியமாகப் புகழுகிறது. 15) மார்க்கண்டேய புராணம் பஞ்ச லட்சணங்களில் சில இலட்சணங்கள் இந்த புராணத்துக்கண்டு. இது பல புராணங்களைப் பார்க்கிலும் தொன்மையானது பாரதத்துக்குப் பின்பு எழுதப்பட்டது. 16) அக்கினி பகவான் வசிஷ்ட ரிஷிக்குச் சொல்லிக் கொடுத்ததினாலே இதற்கு அக்கினி புராணம் என்று பேருண்டாயிற்று. 17) பிரமாண்ட புராணம்-வெவ்வேறான பற்பல நூல்கள் பிரமாண்ட புராணத்திலுள்ள காண்டங்களாகவும் மான்மியங்களாகவும் வழங்கப்படுகிறது. 18) பதுமபுராணம்-இந்தப் புராணத்தில் ஐந்து காண்டங்களுண்டு. ஒவ்வொரு புராணமும் ஒரு தேவதையை மேலான கடவுளென்று போதிக்கும்.*

*சில புராணங்கள் கிருஷ்ணனையே மேலான கடவுளாகப் போதிக்கிறது. பிரம்மாவை வார்த்த புராணத்தில் கிருஷ்ணனுடைய நாயகியாகிய ராதாவை மேலான கடவுளாகப் போதித்திருக்கிறது. அப்படிப்போல சைவ புராணங்கள் சிவனை முக்கியப்படுத்தி அவனை ஏகக் கடவுளாகப் போதிக்கும். காளி புராணம் சிவனுக்குப் பதிலாக சிவனுடைய மனைவி காளியை ஏகக் கடவுளாகப் போதித்திருக்கிறது.*

*தெய்வமும் உலகமும் ஒன்றேயல்லாமல் இரண்டல்ல என்பதாய் ஒவ்வொரு புராணமும் போதிக்கும். புராணத்தில் முக்கியப்படுத்தியிருக்கிற தேவதை விஷ்ணுவானாலும், சிவனானாலும், கிருஷ்ணனானாலும், காளியானாலும், ராதாவானாலும், வேறெந்த தேவதையானாலும், அந்தத் தேவதையைப் பரம கர்த்தாவினாலே தோன்றின உலகமாகவும் காட்டியிருக்கிறது. அந்தத் தேவதையேயன்றி வேறொரு காரணமுமில்லையென்று புராணங்கள் போதிப்பது போல அதுவேயன்றி வேறொரு காரியமுமில்லையென்றும் அவைகள் போதித்திருக்கின்றன.*

*இலிங்க புராணத்தில் உலகமே சிவனுடைய உருபம் என்றும், விஷ்ணு புராணத்தில் விஷ்ணுவே உலகமென்றும், ஸ்கந்த புராணத்திலுள்ள காசி காண்டத்தில் தேவியே அல்லாமல் ஒன்றும் ஒரு காலத்திலாகிலும் இருக்கவில்லையென்றும், பிரமம்மாவை வார்த்த புராணத்தில் கிருஷ்ணனுடைய நாயகியாகிய ராதா என்னப்பட்ட இடைப்பெண்ணைப் புகழும் பாட்டில் அவளே உலகத்துக்குத் தாயானவள், அவளே உலகமென்றுஞ் சொல்லிருக்கிறது.*

*மனிதருடைய குணமும் நடக்கையும் எப்படிப்பட்டவைகளாயிருந்தாலும் அந்தந்தப் புராணத்தில் காட்டிய தேவனிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கிறதே மோட்சமடைவதற்குப் போதுமென்று ஒவ்வொரு புராணமும் போதிக்கின்றது.*

**முடிவுரை**

*இதுகாறும் கண்டவற்றில் கால்டுவெல் அவர்களின் 'பரதகண்ட புராதனம்' வழியாகப் பல உண்மைகளை அறியமுடிந்தது. வேதங்கள் பற்றிய செய்திகள், கருத்தாங்கள் ஓரளவு அறிய முடிந்தது. புராணங்கள் அனைத்தும் புனைவு என்பதை அவர் எடுத்துக்காட்ட முனைந்துள்ளார்.*

*இதிகாசங்கள் காலத்தால் முற்பட்டவை எனினும் உண்மைக்கு புறம்பான பலச் செய்திகள் இருப்பதால். அவை அனைத்தும் கற்பனைக்கு அப்பாற்பட்டவை என்பதையும் குறிப்பாக, பல்வேறு இராமாயணம் இருப்பதால் உண்மையான இராமாயணம் எது என்று கூற முடியாது என்பதையும் சுட்டியுள்ளார். மகாபாரத்தையும், இராமாயணத்தையும் இணைத்துப் பார்த்து அதோடு கடவுளையும் இணைத்து எழுதப்பட்டு இருப்பதால். இவர்களை மக்கள் தெய்வங்களாக ஆக்கிய நிலையும் சொல்லி இருக்கிறார். மகாபாரத்தில் காணலாகும் கீதா உபதேசத்தையும் அவர் விமர்சனம் செய்யத் தவறவில்லை. கீதா உபதேசம் இருதயத்தைக் கடினப்படுத்தி இருப்பதையும், அன்பையும் மற்ற நற்குணங்களையும் கேள்விக் குறி ஆக்கி உள்ளது என்பதை அவர் சுட்ட தவறவில்லை. அதே சமயம் அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்பதையும் அவர் அடிக்கோடிட்டுள்ளார். புராணங்களைப் பொருத்த வரையில் அவற்றில் மீவியல்பு கூறுகள் என்ற இலக்கிய கூறு ஆதிக்கம் செலுத்தியது என்பதையும் அவரது விமர்சனங்களின் வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாறு பரதகண்ட புராதனத்தில் தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.*

*இராமாயாணம், மகபாரதம் எழுந்த காலச்சூழல் வேதங்களின் பரவலாக்கம் புராணங்களில் தெய்வம் பற்றிய கோட்பாடு, மணிப்பிரவாள நடை, கால்டுவெல்லின் தர்க்கவாதங்கள், இதன் மீது நிகழ்த்தபெறும் எதிர்கால ஆய்வுகளாகும்.*

***பார்வை நூல்கள்***


1. *ஞான சந்திர ஜாண்சன் யோ. முனைவர், அருட்பணியாளர் இராபர்ட் கால்டுவெல், மோரியா ஊழியங்கள், சென்னை, 2019*
2. *வேல்சாமி. பொ. பரதகண்ட புராதனம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012*
3. *கௌமாரீஸ்வரி. எஸ். தொல்காப்பயிம், பொருளதிகாரம் (இளம்பூரணனார் உரை), சாரதா பதிப்பகம், சென்னை, 2005*
4. *டேவிட் பிராபகர். ப. முனைவர், கால்டுவெல்: பார்வையும் பங்களிப்பும், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை, 2014*
5. *பூரணச்சந்திரன். க. முனைவர், இந்திய மொழிகள் ஓர் அறிமுகம், நிவேதிதா நல்வாழ்வு, கல்வி அறக்கட்டளை, சென்னை, 2004.*